

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2024) தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் அவர்களின் தாயார் திருமதி கல்பகம் ராமன் அவர்கள் உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சித் துறை ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் பி.எஸ். ராமன் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

நினைவில் வாழும் வி.பி.ராமனுக்கும் - தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமனுக்கும்

# சட்டத்துறையில் சிறந்து விளங்க உறுதுணையாக இருந்தவர் திருமதி கல்பகம் ராமன்!

## மறைவு செய்தியறிந்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜூலை 4-**

**நினைவில் வாழும் வி.பி.ராமன் அவர்கள் வழக்கறிஞராக பணியாற்றியபோதும், தற்போது தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞராகப் பணியாற்றி வரும் பி.எஸ். ராமன் அவர்களுக்கும் சட்டத்துறையில் சிறந்து விளங்க உறுதுணையாக இருந்தவர் மறைந்த திருமதி கல்பகம் ராமன் அவர்கள் என்று மறைவுச் செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மறைந்த வி.பி.ராமன் அவர்களது மனைவியும், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் அவர்களது அருமைத் தாயாருமான திருமதி கல்பகம் ராமன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். அவரது உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினேன்.

அன்னையை இழந்து வாடும் பி.எஸ். ராமன், அவரது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த வி.பி.ராமன் அவர்கள் திராவிட இயக்கத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டதிட்டங்களை வகுப்பதில் பெரும் பங்காற்றியவர். சட்டத்துறையில் அனைவரும் வியந்து பார்க்கக் கூடிய மிகச்சிறந்த வல்லுநராக விளங்கினார். அப்படிப்பட்டவருக்கு நமது அரசு பொறுப்பேற்றவுடன், அவரது இல்லம் அமைந்துள்ள சாலைக்கு அவரது பெயரைச் சூட்டினோம். அந்த நிகழ்ச்சியில் கூட திருமதி. கல்பகம் ராமன் அவர்கள் எனக்கு ஒரு நினைவுப் பரிசை வழங்கி நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தது இப்போதும் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

வி.பி.ராமன் அவர்களும், தற்போது பி.எஸ்.ராமன் அவர்களும் சட்டத்துறையில் சிறந்து விளங்க உறுதுணையாக இருந்தவர் மறைந்த திருமதி கல்பகம் ராமன் அவர்கள் என்றால் மிகையாகாது.

அவரது மறைவால் வாடும் பி.எஸ்.ராமன், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு

# மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா ஆன்மிகப் பயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை, ஜூலை 4 -*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2024-2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களை தலைமையிடமாக கொண்டு தொடங்கும் ஆடி மாத அம்மன் திருக்கோயில் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

*தமிழ்நாட்டில் மக்கள் தாய்தெய்வ வழிபாட்டை தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர். பல்வேறு திருக்கோயில்களுக்கு ஒரே நாளில் சென்று வழிபடுவதை பெரும் விருப்பமாகக் கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு 2022 - 2023 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் ”தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், வைணவத் திருக்கோயில்களுக்கும் முக்கிய விழா நாட்களில் ஆன்மிகப் பயணம் செல்ல சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடுகள் செய்யப்படும்” என அறிவிக்கப்பட்டது. அதன்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் குறைந்த கட்டணத்தில் ஆடி மற்றும் புரட்டாசி மாதங்களில் நடத்தப்பட்ட ஆன்மிகப் பயணங்களால் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக் கான பக்தர்கள் பயன் பெற்றனர்.*

*2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், “ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கும் வயது மூப்பின் காரணமாகவும், பொருளாதார வசதியின்மை காரணமாகவும், இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட, தலா 1,000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்“ என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், சென்னை, தஞ்சாவூர், கோயம் புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களை தலைமையிடமாக கொண்டு புகழ்பெற்ற அம்மன் திருக்கோயி ல்களுக்கு ஆடி மாதத்தில் 1,000 மூத்த குடிமக்கள் கட்டணமின்றி ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.*

*சென்னை மண்டலத்தில் மயிலாப்பூர், கற்பகாம்பாள் திருக்கோயில், பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயில், திருவொற்றியூர், வடிவுடையம்மன் திருக்கோயில், மாங்காடு, காமாட்சியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில் களுக்கு ஒரு பயணத்திட்டமும்,*

*தஞ்சாவூர் மண்டலத்தில் தஞ்சாவூர் பெரியகோயில், வராகியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர், பங்காரு காமாட்சியம்மன் திருக்கோயில், புன்னைநல்லூர், மகா மாரியம்மன் திருக்கோயில், திருக்கரு காவூர், கர்ப்பக ரட்சாம்பிகை திருக்கோயில், பட்டீஸ்வரம், துர்கை யம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,*

*கோயம்புத்தூர் மண்டலத்தில் கோயமுத்தூர், கோனியம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி, மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், ஆனைமலை, மாசாணியம்மன் திருக் கோயில், சூலக்கல், சூலக்கல் மாரியம்மன் திருக்கோயில், கோயமுத்தூர், தண்டுமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,*

*திருச்சி மண்டலத்தில் உறையூர், வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், கமலவள்ளி நாச்சியார் திருக்கோயில், திருவானைக்காவல், அகிலாண்டேஸ்வரி திருக்கோயில், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், உஜ்ஜையினி மாகாளி யம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,*

*மதுரை மண்டலத்தில் மதுரை, மீனாட்சியம்மன் திருக்கோயில், வண்டியூர், மாரியம்மன் திருக்கோயில், மடப்புரம், காளியம்மன் திருக்கோயில், அழகர்கோவில், ராக்காயியம்மன் திருக்கோயில், சோழவந்தான், ஜனகை மாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும்,*

*திருநெல்வேலி மண்டலத்தில் கன்னியாகுமரி, பகவதியம்மன் திருக்கோயில், முப்பந்தல், இசக்கியம்மன் திருக் கோயில், சுசீந்திரம், ஒன்னுவிட்ட நங்கையம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, பகவதியம்மன் திருக்கோயில், குழித்துறை, சாமுண்டி யம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ஒரு பயணத்திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.*

*ஆடி மாத அம்மன் திருக்கோயில்களுக்கான ஆன்மிகப் பயணம் நான்கு கட்டங்களாக, அதாவது 19.07.2024, 26.07.2024, 02.08.2024, 09.08.2024 ஆகிய நாட்களில் அந்தந்த மண்டலங்களில் தொடங்கப்பட உள்ளன. இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்தகுடிமக்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை இந்து சமய அறநிலையத்துறையின் இணையதளமான www.hrce.tn.gov.in-லிருந்து பதிவிறக்கம் செய்தோ அல்லது சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் நேரில் பெற்றோ விண்ணப்பி க்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து 17.07.2024-க்குள் சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் ஒப்படைத்திட வேண்டும்.*

*மேலும், இது தொடர்பான விபரங்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 4253 1111, சென்னை மண்டலத்திற்கு 99417020754, 044-29520937, தஞ்சாவூர் மண்டலத்திற்கு 0436-2238114, கோயம்புத்தூர் மண்டலத்திற்கு 0422-2244335, திருச்சி மண்டலத்திற்கு 0431-2232334, மதுரை மண்டலத்திற்கு 0452-2346445, திருநெல்வேலி மண்டலத்திற்கு 0462-2572783 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். ஆகவே, ஆடி மாத அம்மன் திருக்கோயில் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் மூத்த குடிமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு இறை தரிசனம் பெறலாம் என இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

‘நீட்’ எனும் சமூக அநீதிக்கு எதிரான

# தி.மு.கழகத்தின் போரில் ஒலிக்கும் முழக்கங்கள் நாளைய வெற்றிக்கான அறிவிப்புகள்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 4-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (03.07.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"நீட் எனும் சமூக அநீதிக்கு எதிரான திராவிட முன்னேற்றக் கழகத்தின் போரில் இன்று ஒலிக்கும் முழக்கங்கள் நாளைய வெற்றிக்கான அறிவிப்புகள்!

#BanNEET@Ezhilarasan Cvmp @rajiv_dmk"

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் சார்பில்

# சிறந்த எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகளுக்கு ரூ.1 லட்சம் உதவித் தொகை!

## ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவிப்பு!

*சென்னை, ஜூலை 4 -*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்புகளில் 11 நபர்களது படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவர்களது படைப்பினை வெளியிட உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரச்சினைகளைப் பற்றி எழுதும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் மற்றும் பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத எழுத்தாளர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுவர். இதனை ஊக்குவிக்கும் வண்ணம் இவர்களது சிறந்த இலக்கிய படைப்பினை வெளியிட தலா ரூ.1,00,000/-ஆக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படவுள்ளது என ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.*

*நிபந்தனைகள் வருமாறு:*

*எழுத்தாளர்களுக்கு வயது வரம்பு இல்லை.*

*கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவை எதுவாகவும் இருக்கலாம். இருப்பினும் தமிழ் மொழியிலேயே படைப்பு இருக்க வேண்டும். பிறமொழியி லிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த தமிழ் மொழி படைப்பாகவும் இருக்கலாம்.*

*எம்.பில்., பி.எச்.டி., போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக இருக்க வேண்டும்.*

*படைப்புகள் 90 பக்கங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.*

*ஏற்கனவே சந்தையில் வெளியிடப்பட்டுள்ள படைப்புகளை கொண்டுவிண்ணப்பித்தல் கூடாது.*

*ஒரு முறை விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளர் 5 ஆண்டுகளுக்கு பிறகே விண்ணப்பிக்க வேண்டும். படைப்புகளை தேர்ந்தெடுத்தல் குறித்து அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் முடிவே இறுதியானது.*

*தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இதற்கான விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும், ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்திலும் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், tn.gov.in/forms என்ற இணைய தளத்திலும் (web site) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிக்க கடைசி நாள். 31/07..2024. விண்ணப்பதாரர்கள் தங்களது படைப்பினை இரு நகல்களிலும் டிஜிட்டல் (Digital) முறையிலும், உரிய படிவத்தில் தவறாமல் கைபேசி எண்ணினை குறிப்பிட்டு உரிய காலத்திற்குள் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.*

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 8
ம.அ.8.ந.க.எண்.இ1/7658/A/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (ம) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி
மண்டலம் - 8, பகுதி - 23, வார்டு - 108, சுப்பராயன் தெருவில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடம் கட்டும் பணி

மொத்த பணியின் உத்தேச தொகை ரூ.100.96 லட்சம் முன்வைப்பு தொகை 1% ரூ.1,00,960/-

மேலும் விவரங்களுக்கு (https://www.tntenders.gov.in) மற்றும் https://www.chennaicorporation.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 18.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் 19.07.2024 அன்று மாலை 3.30 மணி வரை

செ.ம.தொ.இ / 2167 / ஒப்பந்தப்புள்ளி / 2024

மண்டல அலுவலர் / ம -8

மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு எதிரான வழக்கு:

# ஒன்றிய அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, ஜூலை 4 -*

*புதிதாக கொண்டுவரப்பட்ட 3 குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் ஒன்றிய அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*ஒன்றிய அரசின் 3 குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.*

*குற்றவியல் சட்டங்களுக்கு இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் பெயர் சூட்டுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது மற்றும் விரோதமானது என்றும் குற்றம்சாட்டியிருந்தார்.*

*இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், வேறு மொழிகளில் சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.*

*இந்நிலையில், இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபீக் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.*

*அப்போது, இந்த வழக்கில் ஜூலை 23ஆம் தேதிக்குள் ஒன்றிய அரசு பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை அன்றைய தினத்துக்கே நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.*



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து நேற்று முன்தினம் (2.7.2024) பாகம் 231, மேட்டு தெரு, குத்தாம்பூண்டி பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பகுதி செயலாளர்கள் தமிழ்வேந்தன், ஐசிஎப்.முரளிதரன், விக்கிரவாண்டி நகர செயலாளர் நைனார் முகமது, விழுப்புரம் நகர செயலாளர் சக்கரை, விக்கிரவாண்டி நகரத் தலைவர் அப்துல் சலாம் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சிறுபான்மை கூட்டமைப்பினர் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய அமைச்சர்கள் க.பொன்முடி, செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமை உரை காங்கிரஸ் மூத்த தலைவர் சா. பீட்டர் அல்போன்ஸ், முன்னிலை திருமதி. விஜிலா சத்தியானந்த், வரவேற்புரை கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் மற்றும் முகமது சகி, இரா.ஜனகராஜ், ஜெயச்சந்திரன், குலாம் மொய்தீன், கிறிஸ்த்துவ நலவாரிய உறுப்பினர் லியோ நெல்சன் நன்றியுரையாற்றினார்.